**இலங்கை உயிர்காப்பு சங்கம் - 2023**

------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை உயிர்காப்பு சங்கத்தின் (''சங்கம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று , வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1993 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 9 ஆல் திருத்தப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் பிரிவு 21-அ இற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் பத்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயத்தினை தெரிவிக்கவில்லை.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் நிதி நிலைமைக்கூற்றில், வருமானக் கூற்றில், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட பொருண்மையான உருப்படிகள் மாற்று முறைமைகள் மூலம் உறுதிப்படுத்துவதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.

இவ்விடயங்கள் காரணமாக நிதி நிலைமைக்கூற்றில், வருமானக் கூற்றில், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ள பெறுமதிகள் அல்லது உருப்படிகளில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் எதனையும் சீராக்கம் செய்வது அவசியமானதா என்று உறுதிசெய்ய முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால்

செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக சம்மேளனம் பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க சங்கத்தின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதும் கணக்காய்வாளர் அறிக்கையை வெளியிடுவதும் எனது பொறுப்பு ஆகும். இருப்பினும், இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியவில்லை.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாத்தறை மாவட்ட விளையாட்டுத் தொகுதியில் உள்ள நீச்சல் தடாகத்தின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு தொடர்பாக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கும் சங்கத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூன்றாவது நிபந்தனையின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 700,000 மாதாந்த கட்டணமொன்று விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களில் அது பொறுப்புக்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மாத்தறை மாவட்ட விளையாட்டுத் தொகுதியில் உள்ள நீச்சல் தடாகத்தின் நிர்வாகம், பராமரிப்பு மற்றும் நிதி முகாமைத்துவம் 2024 பிப்ரவரி 28 அன்று காலாவதியாகி இருந்த போதிலும், தேவையான திருத்தங்களுடன் ஒப்பந்தத்தை நீடிக்கவோ அல்லது | கணக்காய்வு அவதானிப்புடன் சங்கம் உடன்பட்டுள்ளது. | மீளாய்வாண்டு தொடர்பான அனைத்து பொறுப்புகளையும் அங்கீகரித்து பின்னர் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும் மற்றும் தேவையான திருத்தங்களுடன் ஒப்பந்தம் நீடிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இரு தரப்பினரும் ஒப்புக்கொண்ட முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம், மாத்தறை நீச்சல் தடாகத்தில் இருந்த 2023 மார்ச் 10 முதல் 2024 யூன் 30 ஆம் திகதி வரை சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா. 4,230,690 ஆகும். ஆனால் அது பெறப்பட்டு கணக்கிடப்பட்டடிருக்கவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான ரூபா. 2,549,690 வருமானம் இதே அளவால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் சங்கம் உடன்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்கான அனைத்து வருமானம் மற்றும் செலவுகளையும் அங்கீகரித்து நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கு எழுத்து மூலமான சான்றுகள் இல்லாதிருந்தமை

| விடயம் | தொகை (ரூபா.) | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| போக்குவரத்து செலவுகள் | 2,011,160 | நிறைவேற்று குழுவின் அங்கீகாரங்கள் ரூபா.644,000 இற்கான கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் ரூபா.2,720,557 இற்கான துணை ஆவணங்கள். | கணக்காய்வு அவதானிப்புடன் சங்கம் உடன்பட்டுள்ளது. | சங்கம் தேவையான அங்கீகாரங்களைப்பெற்று, கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் துணை ஆவணங்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| மாத்தறை கொட்டவில நீச்சல் தடாகத்தின் நிர்வாகச் செலவுகள் | 1,267,197 | | | |

### 1.6 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2016 ஒக்தோபர் 27 ஆம் திகதியிடப்பட்ட 1990/23 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | விளையாட்டு சங்க பிரமாணங்கள் | | | |
| (அ) | பகுதி II இன் 3 (I) (ii) ஆம் பந்தி | தற்போதைய சர்வதேச தரவரிசை நிலை, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் எதிர்பார்க்கப்படும் இலக்கு மற்றும் செயல்திறன் அளவை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்கள் என்பவற்றை உள்ளடக்கிய எதிர் வரும் பத்து வருட காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டமொன்று அங்கீகாரத்திற்காக விளையாட்டு அபிவிருத்திக்கான பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் சங்கம் உடன்பட்டுள்ளது. | விளையாட்டு பிரமாணங்களுடன் சங்கம் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | பகுதி III இன் 7(xii) ஆம் பந்தி | அடுத்த ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் நடப்பாண்டு முடிவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் விளையாட்டு அபிவிருத்திக்கான பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் சங்கம் உடன்பட்டுள்ளது. | விளையாட்டு பிரமாணங்களுடன் சங்கம் இணங்குதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா. 5,158,711 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா. 4,702,926 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா. 455,785 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது செயற்பாட்டு வருமானம் ரூபா. 13,857,060 தொகையினால் அதிகரித்தமை என்பன இந்த முன்னேற்றத்திற்கான முக்கிய காரணமாகும்.

## 3. கணக்களிதன்மை மற்றும் நல்லாளுகை

### 3.1 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான எதிர்வு கூறப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளை உள்ளடக்கிய வருடாந்த பாதீடு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் சங்கம் உடன்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்கான எதிர்வு கூறப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளை உள்ளடக்கிய வருடாந்த பாதீடு சமர்ப்பிக்கப்பட உள்ளது. |